Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# The Rise and the Fall of the Dravidian Movement Novels

**M. Aravind,** Ph.D. Scholar, Department of Tamil, Presidency College, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-8289-5455
**Dr. M. Vasanthakumar,** Assistant Professor of Tamil, Presidency College, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7119-7221
**DOI: 10.5281/zenodo.7312347**

## Abstract

*"Art is for the people" is the argument of those who use artistic and literary forms to spread ideas. Various movements that have emerged around the world have thus used art and literature as a means of spreading ideas. Leftist movements are at the forefront of this. Following this tradition, the Dravidian Movement also used all forms of art and literature as a means of spreading ideas. As the Dravidian movement took over all forms of literature, they also approached novels. This review refers to them as Dravidian Movement novels. This article analyses these novels into three categories: beginning, growth, and decline. The novel's content and narrative trends were explored in detail. Growth factors and decline factors are explained separately. Overall, this article seeks to explain the place of novels in the tradition of the Dravidian movement, in terms of its growth and decline.*

**Keywords:** Rationalism, Dissemination of Ideas, Annadurai, Governance, Responsibility.

## References

[1] Bagyamuthu, D. (Ed.), *Viduthalaikkuppin Thamizh Novelkal*, Christian Literature Society, Chennai, 1974.
[2] Imayam. *TheHindu*, Chennai, 08.01.2018.
[3] Kannammal, E., *ArignarAnnaavin Padaippukalil KalaiIlakkiya Kotpaadukal*, M.Phil. Degree Thesis, International Institute of Tamil Studies, Chennai, 2017.
[4] Sulosana, N. *DravidaVerumVizhuthukalum* Naam Thamizhar Pathippagam, Chennai, 2013.
[5] Thirunavukkarasu, K. *Hindu Tamil Thisai*, Chennai, 21.01.2018.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# திராவிட இயக்கப் புதினங்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

**மு. அரவிந்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-8289-5455**
**முனைவர் மோ. வசந்தகுமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7119-7221**
**DOI: 10.5281/zenodo.7312347**

**ஆய்வுச்சுருக்கம்**

*கலை மக்களுக்காகவே என்பது கலை, இலக்கிய வடிவங்களைக் கருத்துப் பரப்பலுக்குப் பயன்படுத்துவோரின் வாதம். உலகில் தோன்றியப் பல்வேறு இயக்கங்களும் அவ்வாறு கலையையும் இலக்கியத்தையும் கருத்துப் பரப்பல் உத்தியாகக் கையாண்டுள்ளன. குறிப்பாக இடதுசாரி இயக்கங்கள் இதில் முதன்மையானவை. இத்தகைய மரபின் தொடர்ச்சியாகத் திராவிட இயக்கமும் கலை, இலக்கியத்தின் அனைத்து வடிவங்களையும் கருத்துப் பரப்பல் உத்தியாகக் கையாண்டது. இலக்கியத்தின் எல்லா வடிவங்களையும் திராவிட இயக்கத்தினர் கையில் எடுத்தது போன்றே புதினங்களையும் அணுகினர். அவற்றைத் திராவிட இயக்கப் புதினங்கள் என்று இவ்வாய்வு சுட்டுகிறது. இப்புதினங்களை தொடக்கம், வளர்ச்சி, வீழ்ச்சி என்று மூன்றாக இக்கட்டுரை பகுத்துப் பார்க்கிறது. புதினங்களின் உள்ளடக்கம் குறித்தும் கதைப்போக்குகள் குறித்தும் விரிவாக ஆராயப்பெற்றுள்ளன. வளர்ச்சிக்கான காரணிகளும் வீழ்ச்சிக்கான காரணிகளும் தனித்தனியே விளக்கப் பெற்றுள்ளன. மொத்தத்தில் திராவிட இயக்கக் கருத்துப் பரப்பல் மரபில் புதினங்கள் பெறும் இடத்தை, வளர்ச்சி - வீழ்ச்சி என்ற நிலையில் இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.*

**திறவுச்சொற்கள்:** பகுத்தறிவு, கருத்துப் பரப்பல், அண்ணாதுரை, ஆட்சிப் பொறுப்பு

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வடிவங்களில் ஒன்றாகப் புதினங்கள் திகழ்கின்றன. சாதி எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பொருளியல் ஏற்றத்தாழ்வுகள், ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம், பெண் கல்வி, சீர்திருத்த மணம், பலதாரமணம், கைம்பெண் மறுமணம், விலைமகளிர் அவலம் போன்றவற்றை உள்ளடக்கிய பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்பும் வகையில் திராவிட இயக்கத்தினரால் புதினங்களில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவ்வாறு புதினங்கள்வழி திராவிட இயக்கத்தினர் சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்பையும், புதினங்களில் வெளிப்படும் திராவிட இயக்கத்தின் செல்வாக்கையும், திராவிட இயக்கப் புதினங்களின் தோற்றம் வளர்ச்சிக் குறித்தும் பின்வருமாறு காணலாம்.

**வரலாற்றுப் பார்வை**

திராவிட இயக்கம் என்பது 19ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்ச் சமூகத்தில் உருவாகிய ஒரு வரலாற்று முதன்மைத்துவம் வாய்ந்த சமூக மற்றும் அரசியல் இயக்கமாகும். இவ்வியக்கம் அந்நியர்களின் ஊடுருவலாலும் வஞ்சிப்பினாலும் ஏமாற்றப்பட்டு வாழ்விழந்து, ஒடுக்கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் இருந்த தமிழர்களின் தன்மானத்தையும் தன்னம்பிக்கையையும் தட்டியெழுப்பி விழித்தெழச்செய்தது. இது வேதம், நீதி, புராணம் எனக் காரணம் காட்டி சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகத்தின் பெரும்பகுதி மக்களுக்காகக் குரல் கொடுப்பதைத் தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. சாதி எதிர்ப்பு, இறை மறுப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு, சுயமரியாதை, பெண் விடுதலை என்று மக்களிடையே பல்வேறு தளங்களில் பரப்புரைச் செய்து தமிழ்ச் சமூகத்தை ஒரு முற்போக்குச் சமூகமாக, முன்னேறியச் சமூகமாக மாற்றிய பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு. சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்டத் திராவிட இயக்கத்தின் சீர்திருத்தக் கொள்கைகள் மக்களின் வாழ்வியல் முறைகளில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

**கருத்துப் பரப்பல் உத்திகள்**

திராவிட இயக்கத்தினர் தங்கள் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க கலை மற்றும் இலக்கியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். கலை கலைக்காகவே என்ற கருத்தை அவர்கள் ஏற்கவில்லை. கவிதைகள், கட்டுரைகள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், திரைப்படங்கள் போன்ற கலை, இலக்கிய வடிவங்களை அவர்கள் தங்கள் பரப்புரைக்காகப் பயன்படுத்தினர்.

> **திராவிட இயக்கத்தில் இலக்கியங்கள் எழுத்தாளர்களால் மட்டுமே புகழ்பெறுவதில்லை. எவ்வளவு பெரிய இலக்கியமாக இருந்தாலும், இலக்கியங்களில் உள்ள கருத்துச் சென்றடைய வேண்டுமானால் பிரச்சாரம் அவசியமாகும். புராண - இதிகாச நாடகங்கள், காப்பியங்கள் கடவுள் நம்பிக்கையையும் சமயக் கொள்கைகளையும் பரப்புகின்றனவையாய் இருக்கும்போது, சமூக மறுமலர்ச்சி நாடகங்கள், கதைகள் பகுத்தறிவுப் பரப்புவனவாக ஏன் விளங்கக்கூடாது? தமிழ் இலக்கியத்தை மக்களுக்குரியதாக மாற்றிய பெருமை திராவிட இயக்கத்தையே சாரும். (Imayam, 2018)**

என்கிறார் இமையம்.

**திராவிட இயக்க எழுத்தாளர்கள்**

திராவிட இயக்கத்தை வளர்த்தெடுத்த ஈ.வெ.ரா. பெரியார் இட்டப் பணியைத் தமது எழுத்துக்கள் மூலம் சமூகத்திற்குக் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர்கள் திராவிட இயக்க எழுத்தாளர்களாவர்.

> **திராவிட இயக்கத் தலைவர்களில் பெரும்பாலானோர் எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் இருந்தார்கள். அவர்களைப் பட்டியலிட்டால் 300க்கும் அதிகமானவர்கள் இருப்பார்கள் (திருநாவுக்கரசு, 2018)**

என்று குறிப்பிடுவார் திராவிட இயக்க ஆய்வாளரான க.திருநாவுக்கரசு. அவர்களுள் அண்ணாதுரை முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். அண்ணாதுரையைப் போன்று கிரிசாதேவி, மூவலூர் இராமாமிர்தம், நாரண.துரைக்கண்ணன், மு. கருணாநிதி, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, எஸ்.எஸ். தென்னரசு, டி.கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல், போன்ற பல எழுத்தாளர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளைத் தங்களின் புதினங்கள் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

> **திராவிட இயக்கத்துக்கு இலக்கியம் இல்லை என்றெல்லாம் பலரும் சொல்லிவருகிறார்கள். ஆனால் 1940 களிலிருந்து நிறைய நாவல்கள், சிறுகதைகளை எல்லாம் எழுதியிருக்கிறார்கள் (திருநாவுக்கரசு, 2018).**

பூசாரிகள் புரட்டு, ஆண் பெண் பேதம், அரசியல் ஏமாற்று என அனைத்தையும் திராவிட இயக்க எழுத்தாளர்கள் தங்களது புதினங்களின் வழித் தோலுரித்துக் காட்டியுள்ளனர்.

**தொடக்ககாலப் புதினங்கள்**

வேதநாயகம் பிள்ளையின் ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்னும் புதினமே தமிழில் எழுதப்பட்ட முதல் புதினமாகும். அப்புதினம் 1879இல் எழுதப்பட்டதாகும். பின்னர் ‘கமலாம்பாள் சரித்திரம்’ (1896), ‘பத்மாவதி சரித்திரம்’ (1898) போன்ற புதினங்கள் தொடர்ந்து எழுதப்பட்டன. அப்புதினங்கள் யாவும் திராவிட இயக்கத்தின் முதன்மைக் கொள்கைகளில் ஒன்றான பெண்ணுரிமையைப் பேசும் வகையில் படைக்கப்பட்டன. முதன்முதலில் பகுத்தறிவுப் புதினம் எழுதியவர் கிரிசாதேவி என்பவர் ஆவார். இவர் 1931இல் தன் சொந்த வாழ்கையை ‘மோகன ரஞ்சினி’ என்ற பெயரில் புதினமாக்கினார். இளம் விதவையான கிரிசாதேவி மறுமணம் புரிந்து சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தியவர். சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவரான மூவலூர் இராமாமிர்தம் 1933இல் ‘தாசிகள் மோச வலை அல்லது மதிபெற்ற மைனர்’ என்ற புதினத்தை இயற்றிதேவதாசிகளின் அவலநிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். 1939இல் நாரண. துரைக்கண்ணன் என்பவர் ‘தாசி ரமணி’ என்ற புதினத்தை எழுதினார். இதுவும் தேவதாசி முறைக் குறித்து எழுதப்பட்ட புதினமாகும்.

> **1930களில் எழுதப்பட்ட பகுத்தறிவுப் புதினங்களைத் தொடர்ந்து, திராவிட இயக்கத்தினர் பல்வேறு சமுதாய அவலநிலைகளைப் படம் பிடித்துக்காட்டும் வகையில் புதினங்களைப் படைத்துள்ளனர். அவை சமூகச் சிக்கல்களை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. (சுலோசனா, 2013: 66)**

**அண்ணாதுரைதுரையின் புதினங்கள்**

திராவிட இயக்க எழுத்தாளர்களுள் மிக வீரியமாகச் செயல்பட்டவர் அண்ணாதுரை. செய்யுள், கவிதை, கட்டுரை, கதை, சிறுகதை, புதினம், நாடகம், திரைப்படம், மேடைப்பேச்சு,

இதழியல் என கலை, இலக்கியத்தின் அனைத்து வடிவங்களையும் திராவிட இயக்கத்தின் கருத்துப் பரப்பலுக்கு அவர் கையில் எடுத்தார்.

**எழுதுவது ஒரு பொழுதுபோக்கு; ஓர் கலை; ஒரு தொழில் என்று பலர் வாழ்ந்தபோது, ‘இலட்சியமில்லா எழுத்து மணமில்லா மலர் என்ற குறிக்கோளை வகுத்துக்கொண்டு, எழுத்தும் இலக்கியமும் மக்கள் வாழ்வின் மேம்பாட்டிற்கே என்று எண்ணிச் செயல்பட்ட வல்லவர்களில் ஒருவரே அண்ணாத்துரை. (கண்ணம்மாள், 2017: 88)**

‘சமயம் மனித நலத்தை வளர்க்காது; தன்னம்பிக்கை ஊட்டாது; தன்னுரிமை வழங்காது; அடிமையாக்கிவிடும்; ஆண்மையை அழிக்கும்; வீரத்தை மாய்க்கும்; தற்காப்புத் திறனை அழிக்கும்.’ என்ற இங்கர்சால் கருத்துக்கு வடிவம் தரும் நெறியில் அண்ணாதுரையின் புதினங்கள் அமைந்திருந்தன.

**தனி மனிதன் திருந்தினால் சமுதாயம் திருந்தும்; சமுதாயம் சிறப்படைந்தால் நாடு சிறக்கும்; நாடு சீரும் சிறப்பும் பெற்றால் நல்லாட்சி அமையும் என்ற கருத்து வன்மை அவர் படைப்புகளில் நிற்கிறது (கண்ணம்மாள், 2017: 98).**

‘சௌமியன்’ என்ற புனைப்பெயரில் ‘திராவிட நாடு’ வார இதழில் தொடர்ந்து எழுதப்பட்ட புதினம் ‘குமாஸ்தாவின் பெண்’ அல்லது ‘கொலைகாரியின் குறிப்புகள்.’ டி.கே.சண்முகம் சகோதரர்களால் ‘குமாஸ்தாவின் மகள்’ என்னும் தலைப்பில் அது நாடகமாக நடத்தப்பட்டது. அந்நாடகத்தைப் பார்த்த அண்ணாதுரை அதில் சில மாற்றங்களைச் செய்து ‘குமாஸ்தாவின் பெண்’ அல்லது ‘கொலைகாரியின் குறிப்புகள்’ என்னும் பெயரில் முதல் புதினமாக 1942இல் வெளியிட்டார். ‘சௌமியன்’ என்ற புனைப்பெயரில் ‘திராவிட நாடு’ வார இதழில் 17.10.1943 முதல் 04.03.1945 வரை அண்ணாதுரை தொடர்கதையாக ‘பார்வதி பி.ஏ.’ என்னும் புதினத்தை எழுதினார். ‘ரங்கோன் ராதா’ என்னும் புதினம் 21.04.1946 முதல் 25.01.1948 வரை தொடர்கதையாக வெளிவந்தது. அண்ணாதுரை மேலும் வீங்கிய உதடு, குமரிக்கோட்டம், தசாவதாரம், கலிங்கராணி, தாய் மகளுக்குக் கட்டியத் தாலி போன்ற புதினங்களையும் இரும்பு முள்வேலி, கபோதிபுரக் காதல், கோமளத்தின் கோபம், வண்டிக்காரன் மகள் போன்ற குறும்புதினங்களையும் படைத்துள்ளார்.

**அண்ணாதுரை புதினங்களின் கதைப்போக்குகள்**

அண்ணாதுரை எழுதிய ‘குமாஸ்தாவின் பெண்’ என்ற புதினத்தில் கதைத் தலைவி காந்தா, வறுமைக் காரணமாக வயதான கிழவருக்கு நாலாந்தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். இப்புதினம் இளம் கைம்பெண்ணின் அவலநிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. மூடநம்பிக்கையைச் சாடும்வகையில் அண்ணாதுரை ‘பார்வதி பி.ஏ.’ புதினத்தைப் படைத்துள்ளார். மனித சமுதாயத்தில் சாதி என்னும் பேய் தலை விரித்தாடுகிறது. உண்மைக் காதலுக்கு இடையூறாக சாதி வெறியும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் இருக்கமுடியாது என்பதைப் ‘பார்வதி பி.ஏ.’ புதினத்தில் அண்ணாதுரை சுட்டிக் காட்டியுள்ளார். ‘ரங்கோன் ராதா’ புதினத்தில் பரந்தாமனுக்கும் ராதாவுக்கும் இடையே கலப்பு மணம் நடக்கிறது. சாதிக்

கட்டுப்பாடுகள் மிகுந்திருந்தக் காலத்தில் அண்ணாதுரை கலப்பு மணத்திற்கு வழிவகை செய்யும் வகையில் 'ரங்கோன் ராதா' புதினத்தைப் படைத்துள்ளார். 'குமரிக்கோட்டம்' புதினத்தில் குழந்தைவேலு செட்டியார் என்ற மாந்தர் படைப்பின்வழிச் சாதிக் கொடுமைகளையும் மேல் சாதிக்காரர்கள் தங்களைத் தாங்களே எண்ணுவோரின் சாதிப்பிடிப்பையும் அண்ணாதுரை விளக்குகிறார். சாதிக்கட்டமைப்பின் பிடி உடைய கலப்பு மணம்தான் தீர்வு என்பதை உணர்ந்த அண்ணாதுரை 'ரங்கோன் ராதா' புதினத்தைப் போன்றே 'தசாவதாரம்' புதினத்திலும் கலப்பு மணத்தை வலியுறுத்துகிறார். விமலா என்ற இளம் பெண் விலை மகளாக்கப்பட்ட சமூகக் கொடுமையை 'வீங்கிய உதடு' என்னும் புதினத்தில் அண்ணாதுரை பதிவு செய்கிறார். இவ்வாறு திராவிட இயக்கக் கருத்துக்களைப் பரப்பும் பரப்புரைக் களமாக புதினங்களை அமைத்துக்கொண்டு அவற்றின்வழி அண்ணாதுரை தன் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.

**அண்ணாதுரைக்குப் பிந்தைய வளர்ச்சி**

திராவிட இயக்கப் புதினங்களுக்கு முன்னோடியாக அண்ணாதுரை திராவிட இயக்கக் கருத்தியலையொட்டி பல புதினங்களை இயற்றினார். அண்ணாதுரை வளர்த்த திராவிட இயக்கப் புதினம் என்னும் செடியை அவருக்குப் பின் வந்த திராவிட இயக்க எழுத்தாளர்கள் மரமாக வளர்த்தனர். அவர்கள் அண்ணாதுரையைப் போன்றே அவருக்குப்பின் பல பகுத்தறிவுப் புதினங்களை இயற்றினர்.

**ஏ.வி.பி. ஆசைத்தம்பி**

ஏ.வி.பி. ஆசைத்தம்பி 'டாக்டர்' என்னும் புதினத்தை 1952இல் படைத்துள்ளார். இட ஒதுக்கீட்டுக் கொள்கையை விளக்கும் வகையில் இப்புதினம் அமைந்துள்ளது. கதைத் தலைவன் சேகருக்கு, மருத்துவக் கல்லூரியில் மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையே மருத்துவம் படிக்க இடம் கிடைக்கிறது. அவன் கல்லூரியில் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளை ஒருங்கிணைத்து சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறான். ஏ.வி.பி.ஆசைத்தம்பி இட ஒதுக்கீட்டின் வழி பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூக மாணவர்களும் கல்வி பெற்று உயர்நிலையை அடையலாம் என்பதை 'டாக்டர்' புதினத்தில் விளக்கியுள்ளார்.

**இராம. அரங்கண்ணல்**

இராம. அரங்கண்ணலின் 'கடிகாரம்' என்னும் புதினம் 1956இல் வெளிவந்தது. கடவுள் பெயரால் கூறப்படும் பக்தி உண்மையானால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏன் பிறக்கின்றன என்ற சீர்திருத்தச் சிந்தனையைக் 'கடிகாரம்' புதினத்தின்வழி அரங்கண்ணல் வெளிப்படுத்தியுள்ளார். இதில் பார்ப்பனர்களையும் அவர்கள் கடவுளின் பெயரால் மக்களை ஏமாற்றும் போலித்தனத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். 'கடிகாரம்' புதினத்தில் வரும் நாச்சியும் நல்லானும் 'புது வாழ்வுக் கழகம்' என்னும் சமூகச் சீர்திருத்த அமைப்பின்வழி கடவுள் பெயரால்

ஏமாற்றும் எத்தர்களுக்கு எதிராக கருத்துப் பரப்பல் பணியில் ஈடுபடுவதாக அவர் சித்தரித்துள்ளார்.

**டி.கே. சீனிவாசன்**

டி.கே. சீனிவாசனின் 'ஆடும் மாடும்' புதினம் 1959இல் வெளிவந்த புதினங்களில் மிகச்சிறந்த புதினமாகக் கருதப்படுகிறது. சமூகத்தில் ஒரு ஆணை மாட்டிற்கும் பெண்ணை ஆட்டிற்கும் உருவகப்படுத்தி சீனிவாசன் சிறப்பாக இப்புதினத்தை அமைத்துள்ளார். சமூகத்தின் கோரப்பிடியிலிருந்து தப்பி கதைத் தலைவி மோகனா ஒரு பெண்ணாக வாழ முற்படுகிறாள் என்பதை 'ஆடும் மாடும்' புதினம் சுட்டிக்காட்டியுள்ளது. பெண்ணியம் பேசும் புதினமாக சீனிவாசன் இப்புதினத்தைப் படைத்துள்ளார்.

**மு. கருணாநிதி**

மு. கருணாநிதியின் முதல் புதினம் 1960இல் வெளிவந்த 'புதையல்' என்னும் புதினமாகும். அப்புதினம் மூடநம்பிக்கையைப் போக்கும் காதல் கதையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்புதினத்தை, சீர்திருத்த மணத்தை ஆதரித்தும் சாதி, சமய, மூடநம்பிக்கைகளை எதிர்த்தும் அவர் அமைத்துள்ளார்.

**எஸ்.எஸ். தென்னரசு**

திராவிட இயக்கப் படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் எஸ்.எஸ்.தென்னரசு. 1953இல் எழுதத்தொடங்கிய தென்னரசு 1975 வரை வரலாற்றுப் புதினங்களையே பெரிதும் படைத்துள்ளார். அப்படைப்புகள் யாவும் கற்பனையுடன் கூடிய பொழுதுபோக்குக் கூறுகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றன. 1975க்குப் பின்னர் அவர் தமது படைப்புகளில் சமூகச் சிக்கல்களை எடுத்தாளத் தொடங்கினார். எஸ்.எஸ். தென்னரசுவின் 'கண்மணி' புதினத்தில் வரும் தலைவி கண்மணி ஒரு நாடக நடிகையாவாள். அவள் பலரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்படுகிறாள். அதிகார பலம், பண பலம் படைத்தவர்கள் சமூகத்தில் பெண்களைப் படுத்தும் பாடுகளை 'கண்மணி' புதினத்தில் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

**வீழ்ச்சி**

**திராவிட இயக்கத்தவர்கள் தங்களது கருத்துப் பரவலுக்காகவே இலக்கியத்தை ஒரு கருவியாகக் கையாண்டுள்ளனர் என்பது தெளிவான உண்மையாகும். சமூகச் சீர்திருத்தங்களை மக்களிடையே கொண்டு சேர்ப்பதில் திறமைப் படைத்தவர்களாகத் திராவிட இயக்க எழுத்தாளர்கள், தங்களைச் சமுதாயத்தில் அடையாளங் காட்டிக்கொண்டனர். (சுலோசனா, 2013: 98)**

'பார்வதி பி.ஏ.'வில் பார்வதி என்னும் மாந்தர், 'ரங்கோன் ராதா'வில் ராதா என்னும் மாந்தர், 'ஆடும் மாடும்' புதினத்தில் பத்மா என்னும் மாந்தர் போன்ற மாந்தர் படைப்புகள் அனைத்தும் கொள்கைப் பரப்பலுக்காகவே படைத்துள்ளனர். சமூகத்தில் நிலவும் சாதி, சமய வேறுபாடுகளைக் கண்டித்தும், மூடப் பழக்கவழக்கங்களைச் சாடியும்,

பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்தும் திராவிட இயக்கத்தினர் தங்கள் புதினங்களைப் படைத்துள்ளனர்.

> **பெரியார் ஆரம்பித்த சுயமரியாதை இயக்கத்தினர் நாவல் என்ற உருவம் தங்கள் பிரச்சாரத்திற்கு ஒரு தக்க கருவி என்று கண்டு கொண்டனர். இதன் விளைவாக ஏராளமான நாவல்களை எழுதித் தள்ளினார்கள். ஆனால் நாவலின் உருவத்தை அவர்கள் ஆழமாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. அரசியல் நோக்கில் தங்கள் இலக்கை எய்தியவுடன் ஏறக்குறைய எழுதுவதையே நிறுத்திவிட்டனர். (பாக்கியமுத்து, 1974)**

தி. பாக்கியமுத்துவின் இந்தக் கருத்து ஆழமாகப் பகுத்துப் பார்க்க வேண்டியது. திராவிட இயக்கத்தினர் எந்த நோக்கத்திற்காகப் புதினங்களை இயற்றினரோ அதில் வெற்றிக் கண்டனர் என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் தங்களின் எழுத்துப் பணியை நிறுத்திக்கொண்டனர். இங்கு கவனிக்க வேண்டியது, திராவிட இயக்கத்தின் முதன்மை இலக்கு சமூகச் சீர்திருத்தமே அன்றி ஆட்சிப் பொறுப்பு அல்ல. ஆட்சிப் பொறுப்பு என்பது அந்த இலக்கில் ஒரு மைல்கல் மட்டுமே என்பதைத் தெளிய வேண்டும். சமூகச் சீர்திருத்தம் என்பது அரசால் மட்டுமே சாத்தியப்படுவது அன்று. மாறாக தனிமனிதனின் மனமாற்றம் சார்ந்தது. அதற்குப் பரப்புரை மிகவும் தேவை. திராவிட இயக்கத்தினர் தங்களது கருத்துப் பரப்பலை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். காலத்திற்கு ஏற்ற வகையில் மின்னணு ஊடகங்களை அவர்கள் வீரியமாக கையில் எடுத்திருக்க வேண்டும். அந்த வகையில் திராவிட இயக்கத்தினர் சறுக்கினர் என்றே கூற வேண்டும். திராவிட இயக்கப் புதினங்களுடைய வளர்ச்சிப்போக்கின் இறுதிக் கட்டத்தை அதன் வீழ்ச்சிப் போக்காகவும் கருதவேண்டியுள்ளது.

**முடிவுரை**

சாதி, மூடநம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம் போன்ற சமூக மடமைகளுக்கு எதிராக திராவிட இயக்கம் போராடிய விதம், முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டு மக்களை முன்னேற்றிய பாங்கு முதலியவற்றை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. புதினங்களின் வழியே திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும், சமூகச் சீர்திருத்தத்திற்கு அவ்வியக்கம் ஆற்றியப் பங்களிப்புகளையும், அதன் கொள்கைகளை மக்களிடையே கொண்டு சேர்க்க திராவிட இயக்க எழுத்தாளர்கள் எடுத்த முயற்சிகளையும் அறிய முடிகிறது. அவ்வாறு திராவிட இயக்க வளர்ச்சிப் போக்கில் எழுத்தாளர்கள் குறித்தும், அவர்களது படைப்புகள் குறித்தும் இவ்வாய்வில் தெரியவருகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] Imayam, *The Hindu.* Chennai, 08.01.2018.
[2] கண்ணம்மாள், எ. *அறிஞர் அண்ணாதுரைவின் படைப்புகளில் கலை இலக்கியக்*

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

*கோட்பாடுகள்.* ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2017.

[3] சுலோசனா, நா. *திராவிட வேரும் விழுதுகளும்.* நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2013.

[4] திருநாவுக்கரசு, க. *இந்து தமிழ் திசை.* சென்னை, 21.01.2018.

[5] பாக்கியமுத்து, தி. (ப.ஆ.). *விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள்.* கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1974.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.